# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, வைகாசி - 22 சனி 05.06.2021 மலர் - 2, இதழ் - 60


## சேவைத்துளிகள்




சேவாபாரதி தமிழ்நாடு சார்பாக ஐம்பது ஆக்சிஜன் செறிவூட்டிகள் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, ஆத்தூர், ராசிபுரம், ஈரோடு, கோபிசெட்டிப்பாளையம், சேலம், தர்மபுரி, திருவண்ணாமலை, வந்தவாசி ஆகிய பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. முன்னதாக, கடந்த வாரம் ஐம்பது ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் வேறு சில பகுதிகளுக்கு அனுப்பப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி சார்பில் இரண்டு ஆக்ஸிஜன் செறிவூட்டும் கருவிகள் வழங்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம் பைங்குளம் மண்டல் கூட்டாலுமூடு பகுதியில் S.ராஜேந்திரன் என்கிற காங்கிரஸ் மாவட்ட செயற்குழு உறுப்பினர் கொரோனாவால் காலமானார். அவரது உடல் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி மூலம் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.





விருதுநகர் மாவட்டம், சாத்தூர் பகுதியில் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி சார்பாக கொரோனா ஊரடங்கு காலத்தில் உணவில்லாமல் தவிக்கும் மக்களுக்கும், மருத்துவமனையில் உள்ளோருக்கும் உணவு வழங்கப்பட்டது.

வில்லிவாக்கம், கொளத்தூர் பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ், ஹிந்து முன்னணி அமைப்பினர் சார்பில் கபசுரக் குடிநீர் தொடர்ந்து 35 நாட்களாக, 20 ஆயிரம் பேருக்கும் அதிகமானோருக்கு வழங்கப்பட்டு வருகிறது.






நாகப்பட்டினம் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி சார்பில் கபசுரக் குடிநீர் வழங்கப்பட்டது.



மயிலாடுதுறை, மேலபாண்டூர் பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி சார்பில் கபசுரக் குடிநீர் வழங்கப்பட்டது.



மயிலாடுதுறை கொத்தத்தெரு பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி சார்பில் கபசுரக் குடிநீர் வழங்கப்பட்டது.

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் அரசு மருத்துவமனை, பெருமாள்கோயில் தெரு, புளியமரத் தெரு உள்ளிட்ட பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி மற்றும் சோஹோ பௌண்டேஷன் சார்பில் மற்றும் இரவு உணவு வழங்கப்பட்டது.





பாரதி சேவா சங்கம் சார்பில் ஆக்ஸிஜன் செறிவூட்டி வேலூர் நாராயணி மருத்துவமனைக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கொரோனாவால் வாழ்வாதாரம் இழந்து தவிக்கும் மாற்றுத்திறனாளி குடும்பத்திற்கு,



சேவாபாரதி சார்பாக 57 நபர்களுக்கு ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நிவாரண பொருளை சக்ஷம் மூலமாக வழங்கப்பட்டது.

சென்னையில் கொரானாவால் வாழ்வாதாரம் இழந்து தவிக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு, ரோட்டரி கிளப் ஆஃப் சென்னை போர்ட் சிட்டி மூலமாக 7 நபர்களுக்கு, சுமார் ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நிவாரண பொருளை சக்ஷம் மூலமாக வழங்கப்பட்டது.





திருநெல்வேலி மாவட்டம், சிந்துபூந்துறை சுந்தரேஸ்வரர் கோயிலில் வைத்து 300க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பா.ஜ.க சார்பில் அரிசி, மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது.

திருவாரூர், முத்துப்பேட்டையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு இறந்தவரை அவர்களின் முறைப்படி அடக்கம் செய்த பா.ஜ.க தொண்டர்கள்.





சென்னையில் கொரானா நோயாளிகளை மருத்துவமனைக்கு இலவசமாகக் அழைத்துச் செல்ல ஆர்.எஸ்.எஸ், பாரதி சேவா சங்கம் தொண்டர்களால் துவக்கப்பட்ட ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய ஆம்புலன்ஸ் சேவையை விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் அகில இந்திய இணைச் செயலாளர் கோ ஸ்தாணுமாலயன் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

# சேவாபாரதியின் கொரோனா தனிமைப்படுத்தும் மையம்

ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி தமிழ்நாடு சார்பாக சென்னையில், கொரோனா நோயாளிகளுக்கான இலவச தனிமைப்படுத்தும் மையம் துவங்கப்பட்டது. இதன் சிறப்பு அம்சங்களாக இங்கு ஆண் மற்றும் பெண் இருபாலருக்கான தனித்தனியாக தங்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தங்கும் இடம், உணவு, அடிப்படை மருந்துகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகிறது. நோயாளிக்கு யோகா பயிற்சி, மூச்சிப் பயிற்சி, மன அமைதிக்கான தியான பயிற்சிகள் மற்றும் பல பொழுதுபோக்கு அம்சங்களுடன் உள்ளது. 24 மணி நேர மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உதவி. முகவரி: சேவாபாரதி இலவச தனிமைப்படுத்தும் மையம், 4வது மெயின் ரோடு, எம்.கே.பி நகர், வியாசர்பாடி, சென்னை 600039. தொடர்புக்கு: 7305087898.



# திருச்சியில் கொரோனா உதவி மையம் துவக்கம்



திருச்சி மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி மற்றும் சாதனா அறக்கட்டளையின் சார்பாக திருச்சி அரசு மருத்துவமனையில் கொரோனா நோயாளிகளுக்கான ஹெல்ப் லைன் உதவி மையம் துவக்கப்பட்டது. நிகழ்ச்சியில் திருச்சி மாவட்டத் தலைவர் சம்பத் தலைமை தாங்கினார். மேலும் திருச்சி மாவட்ட ஆட்சியர் பவித்ரா, அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் வனிதா மற்றும் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

# மேலும் ஒரு உள்நாட்டு தடுப்பூசி

ஹைதராபாத்தில் செயல்பட்டு வருகிற பயோலஜிக்கல் - இ லிமிட்டட் எனும் நிறுவனம் தயாரித்து வரும் கொரோனா தடுப்பு மருந்து வரும் ஆகஸ்டிற்கும் டிசம்பருக்கு இடையில் வெளியாகும். இந்த நிறுவனம் 30 கோடி டோஸ் தடுப்பு மருந்து வழங்க உள்ளது. இந்த தடுப்பூசி மூன்றாவது கட்ட பரிசோதனையை தற்போது நடத்தி வருகிறது. இந்நிறுவனத்திற்கு ரூ.1,500 கோடியை முன்பணமாக மத்திய அரசு வழங்கியுள்ளது.




# தாக்கத்தை ஏற்படுத்தும் நிஜ வாழ்க்கை சம்பவம்



கடந்த சில தினங்களுக்கு முன் ரோட்டரி ஹெரிடேஜ் மைசூருவின் உறுப்பினர்கள், கொரோனா சேவைக்கான அன்னதான தயாரிப்புகளில் மும்முரமாக வேலை செய்துக் கொண்டிருந்த நேரம், பார்த்த உடன் ஏழை என்று சொல்லத்தக்க 70 வயதுக்கும் அதிகமான கமலம்மா அங்கு வந்திருந்தார். அவர் அங்கு சிறிது உணவை எதிர்பார்த்து வந்திருக்கலாம் என்பதுதான் அங்கிருந்தவர்களின் இயல்பான எதிர்பார்ப்பாக இருந்தது. அதனால், அவர் கேட்பதற்கு முன்பே அவரிடம் சென்று சில உணவுப் பொட்டலங்களை நீட்டியபோது அவர் அதனை வாங்க மறுத்துவிட்டார். பிறகு சற்றுத் தயக்கத்துடன் தனது தைரியத்தைத் திரட்டி, தான் மறைந்திருந்த ஒன்றை வெளியே எடுத்து நீட்டி, "நான் வாழும் பகுதியில் நீங்கள் வந்து உணவு இலவசமாக வழங்குவதை பார்த்துக்கொண்டிருக்கிறேன். இதில் எனது பங்களிப்பும் சிறிது இருக்க வேண்டும் என ஆசைப்பட்டேன். அதனால் நான் வாங்கும் 600 ரூபாய் மாத ஓய்வூதியத்திலிருந்து 500 ரூபாயை இதற்கு கொடுக்க வேண்டும் என்று வந்துள்ளேன். இது ஒரு சிறிய தொகைதான். ஆனால் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுங்கள்" என அந்தத்தாய் கூறியபோது அங்கிருந்த அனைவரது கண்களிலும் கண்ணீர் பெருக்கெடுத்தது.

# எக்ஸ்ரே சேது

மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் ஆதரவுடன், பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தால் தன்னார்வ அமைப்பாக உருவாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோடிக்ஸ் தொழில்நுட்பப் பூங்கா (ஆர்ட்பார்க்), பெங்களூருவில் இயங்கும் மருத்துவ தொழில்நுட்ப நிறுவனமான நிரமை, இந்திய அறிவியல் கழகம் ஆகியவற்றுடன் இணைந்து வாட்ஸ்அப் செயலி மூலம் அனுப்பப்படும் அதிகம் செறிவு இல்லாத மார்பு எக்ஸ்ரே ஊடுகதிர் படங்களில், கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள நோயாளிகளைக் கண்டறிவதற்காக எக்ஸ்ரே சேதுவை உருவாக்கியுள்ளது. இதனைப் பயன்படுத்துவதற்கு, www.xraysetu.com என்ற இணையதளத்தில் 'Try the Free XraySetu Beta' என்ற பொத்தானை மருத்துவர்கள் தேர்வு செய்ய வேண்டும். இதைத்தொடர்ந்து அடுத்தக் கட்டமாக வாட்ஸ்அப் செயலியை அடிப்படையாகக் கொண்ட இணையம் வாயிலான தானியங்கி தகவல் பரிமாற்றம் அல்லது அலைபேசி செயலியை அவர்கள் தேர்ந்தெடுக்கலாம். அல்லது +91 8046163838 என்ற வாட்ஸ்அப் எண் மூலம் எளிதாக எக்ஸ்ரே சேது சேவையைத் தொடங்கலாம். பிறகு நோயாளியின் ஊடுகதிர் புகைப்படத்தைத் தேர்வு செய்து ஒரு சில நொடிகளில் விளக்கப் படங்களுடன் கூடிய இரண்டு பக்க தானியங்கி அறிக்கையைப் பெற்றுக்கொள்ளலாம். மருத்துவர்கள் இந்த அறிக்கையை வைத்து நோயாளிக்கு தகுந்த அறிவுரை சொல்வார்கள். இதுவரை பாரதத்தில் உள்ள கிராமங்களில் இதன் மூலம், சுமார் 1,200 பேர் பலன் பெற்றிருக்கின்றனர்.



# குடியுரிமை பெற்ற பாகிஸ்தான் ஹிந்துக்கள்



பாகிஸ்தானிலிருந்து தப்பித்து பாரதத்தில் (ஜெய்ப்பூர்) குடியேறிய பூலா தேவி, பாவன் குமார், பியாரி, ராஜேஷ் குமார், சந்திர பிரகாஷ், ப்ரியா, மமதா என 7 பேருக்கு பாரதக் குடியுரிமை வழங்கப்பட்டது. ஹிந்துக்களுக்கு ஒரே புகலிடம் பாரதம் மட்டும்தான் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

# தெருக்களில் வசிப்பவர்களுக்கு ரேஷன்



தெருக்களில் வசிப்பவர்கள் உள்ளிட்ட ஏழை, எளிய மக்களை கண்டறிந்து அவர்களுக்கு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் குடும்ப அட்டைகள் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கு வேண்டும், அதற்காக சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. முக்கியமாக, தெருக்களில் வசிப்பவர்கள், குப்பை சேகரிப்பவர்கள், தெருக்களில் பொருட்களை விற்பவர்கள், ரிக்ஷா இழுப்பவர்கள் போன்றவர்களைக் கண்டறிய வேண்டும் என மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பயனடையும் மக்களில், அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களும், பொருளாதாரத்தில் பின் தங்கிய பிரிவினரும், தற்போதைய கொரோனா பெருந்தொற்று சூழலில் இந்தச் சட்டத்தால் பயனடைவர். தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பயனடையும் தனிநபர்களையும், குடும்பங்களையும் கண்டறியும் பொறுப்பு, அவர்களுக்கு குடும்ப அட்டைகளை விநியோகம் செய்வது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு, மாநில, யூனியன் பிரதேச அரசுகளையே சார்ந்தது.

# பொருளாதார வளர்ச்சி குறித்து ரிசர்வ் வங்கி



ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கை குறித்தக் கூட்டத்தில், பணவீக்கத்தை குறிப்பிட்ட இலக்கிலேயே வைப்பதற்கு ஏதுவாகவும், பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவு அளிக்கும் வகையிலும், ரெபோ வட்டி விகிதத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. 4 சதவீதமாகவே தொடரும். ரிவர்ஸ் ரெபோ வட்டி விகிதமும் 3.5 சதவீதமாகவே தொடரும் என ரிசர்வ் வங்கி கவர்னர் சக்திகாந்த தாஸ் அறிவித்துள்ளார். கடந்த 2020 மே 22ம் தேதி வட்டி விகிதத்தில் மாற்றம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு, கடந்த 6 ஆலோசனை கூட்டங்களில் வட்டி விகிதங்களில் எந்த மாற்றம் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், பாரதத்தில் ஏற்பட்டுள்ள கொரோனாவின் இரண்டாவது அலை காரணமாக, நடப்பு நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9.5 சதவீதமாக இருக்கும் என ரிசர்வ் வங்கி கணித்துள்ளது. முன்னதாக இது 10.5 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க தடுப்பூசிகளை தயாரிக்கும் பாரதம்



அமெரிக்காவின் பைசர், ஜான்சன் அண்டு ஜான்சன், மாடர்னா ஆகிய மூன்று நிறுவனங்களின் கொரோனா தடுப்பூசி மருந்துகளையும் அவற்றின் உரிமம் பெற்று பாரதத்திலேயே தயாரிக்க மத்திய அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இது குறித்து, 'ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசி மருந்தை நமது நாட்டில் டாக்டர் ரெட்டிஸ் லேபாரட்டரீஸ் தயாரிக்க வெளியுறவு அமைச்சகம் அனைத்து உதவிகளையும் செய்துள்ளது. அதேபோல, அமெரிக்காவின் பைசர், ஜான்சன் அண்டு ஜான்சன், மாடர்னா ஆகியவற்றின் தடுப்பூசி மருந்துகளை கொள்முதல் செய்வது, அந்நிறுவனங்களிடம் உரிமம் பெற்று பாரதத்திலேயே தடுப்பூசிகளை தயாரிப்பது குறித்தும் பேசி வருகிறோம்' என மத்திய வெளியுறவு துறை செய்தி தொடர்பாளர் அரிந்தம் பக்சி தெரிவித்துள்ளார். 'இந்தாண்டுக்குள் அனைத்து மக்களுக்கும் தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக 250 கோடி டோஸ் தடுப்பூசி மருந்து தயாரிப்பது தொடர்பாக பல மருந்து நிறுவனங்களுடன் பேச்சு நடக்கிறது' என உள்துறை இணை அமைச்சர் கிஷன்ரெட்டி கூறியுள்ளார்.

# வாட்ஸ்அப் தந்திரம்

தனிநபர் பாதுகாப்பு தொடர்பான புதிய கொள்கைகளை வாட்ஸ்அப் நிறுவனம் அண்மையில் அறிமுகம் செய்தது. தங்களின் விதிமுறை மற்றும் கட்டுப்பாடுகளை ஏற்றுக் கொண்டால் மட்டுமே வாட்ஸ்அப் நிறுவனம் தொடர்ந்து பாரதத்தில் தனது டிஜிட்டல் வர்த்தகத்தை மேற்கொள்ள முடியும் என்றும் எச்சரிக்கை விடுத்தது. இதற்கு மத்திய அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இதனால், மத்திய அரசை எதிர்த்து வாட்ஸ்அப் நிறுவனம் டெல்லி உயர்நீதிமன்றத்தில் முறையிட்டது. நீதிமன்றம், பதில் மனுவை தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு உத்தரவிடப்பட்டது. அதன்படி, மத்திய அரசு தாக்கல் செய்த பதில் மனுவில், 'வாட்ஸ்அப் நிறுவனம், தனது புதிய கொள்கையை ஏற்றுக் கொள்ளும்படி வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வருகிறது. தனது கொள்கையை மக்களிடம் திணிக்க தந்திரமாக வேலைகளை செய்து வருகிறது. மத்திய அரசு புதிதாக தயாரித்துள்ள தனிநபர் தகவல் பாதுகாப்பு சட்டம் விரைவில் அமல்படுத்தப்பட உள்ளது. அதற்கு முன்பாக, தனது புதிய கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்துவிட வேண்டும் என்று அந்த நிறுவனம் முனைப்பு காட்டுகிறது. வாட்ஸ்அப் நிறுவனத்தின் தந்திரங்களை தடுக்கும் விதமாக உத்தரவு பிறப்பிக்க வேண்டும்' என கோரியுள்ளது.



# ரேஷன் பொருட்கள் - மத்திய அரசு சாதனை



மத்திய அரசால், கொரோனா முழு ஊரடங்கு காலத்தில் ரேஷன் அட்டைதாரர்களுக்கு இலவச உணவு தானியங்கள் வழங்கப்பட்டது குறித்த தகவலை வெளியிட்ட உணவு செயலாளர் சுதன்ஷு பாண்டே செய்தியாளர்கள் சந்திப்பில், 'மே மாதத்தில் மட்டும் கொரோனா இரண்டாம் அலையின் நிவாரணமாக, ரேஷன் கடைகள் மூலம் 55 கோடி பயனாளர்களுக்கு 28 லட்சம் டன் இலவச உணவு தானியங்கள் வழங்கப்பட்டுள்ளது. மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு இதுவரையில் சுமார் 63.67 லட்சம் டன் உணவு தானியங்கள் வழங்கப்பட்டுள்ளது. 'பிரதம மந்திரி கரீப் கல்யாண் அன்ன யோஜனா' (PMGKAY) திட்டத்தின் கீழ் 80 லட்சம் டன் உணவு தானியங்கள் வழங்கப்பட வேண்டும். மே மற்றும் ஜூன் மாதத்தில் NSFA பயனாளர்களுக்கு 90 மற்றும் 12 சதவீத உணவு தானியங்கள் வழங்கப்பட்டுள்ளது. மே, ஜூன் மாதங்களில் 13,000 கோடிக்கு மேலாக உணவு மானியமாக வழங்கப்பட்டுள்ளது' என தெரிவித்தார்.

# தடுப்பூசியை அதிக விலைக்கு விற்கும் அரசு

பஞ்சாபை ஆளும் காங்கிரஸ் அரசு, கொரோனா தடுப்பு மருந்தை ரூ. 400க்கு வாங்கி, அதனை தனியார் மருத்துவமனைகளுக்கு ரூ. 1,060க்கு விற்கிறது. இதற்காக தனியாக வங்கிக் கணக்கும் ஆரம்பித்துள்ளது. இந்த முறையற்ற விற்பனையால், அம்மாநில அரசு ஒரு டோசுக்கு ரூ. 660 லாபம் ஈட்டுகிறது. இதனை வாங்கும் தனியார் மருத்துவமனைகள் அதனை, ஒரு டோஸ் ரூ. 1,560க்கு விற்கின்றனர். அதனால் அவர்களுக்கு ரூ. 500 லாபம் கிடைக்கிறது. பாரத் பயோடெக்கிடம் இருந்து வாங்கிய ஒரு லட்சம் டோஸ் குப்பிகளில் இருந்து இந்த விற்பனை நடைபெற்றுள்ளது. 18 முதல் 44 வயதானவர்களுக்கு தடுப்பூசி போடுவதற்கு மக்கள் நிதியுதவி செய்ய பஞ்சாப் அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது. அதிலும், அரசு லாபத்தை ஈட்டுவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மாநில அரசின் தடுப்பூசி மையங்களில் நிலவும் கடும் பற்றாக்குறையால் பல மையங்கள் மூடப்பட்டுள்ளன. சுகாதார நெருக்கடியை பயன்படுத்தி காங்கிரஸ் அரசு இப்படி வெட்கக்கேடான முறையில் லாபம் ஈட்டுகிறது என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.





# மருத்துவ சங்கத்துக்கு நீதிபதிகள் அறிவுரை

கடந்த மாதம் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்ற யோகா குரு பாபா ராம்தேவ், ஆங்கில மருத்துவம் காரணமாக லட்சக்கணக்கான கொரோனா நோயாளிகள் உயிரிழக்கின்றனர், அலோபதி மருத்துவம் முட்டாள்தனமானது என கூறியிருந்தார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த விவகாரம் தொடர்பாக, டெல்லி மருத்துவ சங்கம் (டி.எம்.ஏ) சார்பில் டெல்லி உயர் நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தது. நீதிமன்றத்தில், இந்த மனு குறித்த விசாரணையில், 'ராம்தேவின் கருத்து எங்கள் சங்க உறுப்பினர்களை பாதிக்கிறது. மேற்கொண்டு கருத்துகளை தெரிவிக்க அவருக்கு தடை விதிக்க வேண்டும். தனது கருத்துக்காக மன்னிப்பு கோருமாறும் ரூ.1 அடையாள அபராதம் செலுத்துமாறும் அவருக்கு உத்தரவிட வேண்டும். கொரோனாவை குணப்படுத்துவதாகக் கூறி 'கரோனில்' என்ற மருந்தை ராம்தேவின் பதஞ்சலி நிறுவனம் விற்பனை செய்கிறது. இந்த மருந்து குறித்து விளம்பரப்படுத்தக் கூடாது என அரசு கூறிய நிலையிலும், ரூ. 250 கோடிக்கு இந்த மருந்தை விற்பனை செய்துள்ளது பதஞ்சலி. இதற்கு தடை விதிக்க வேண்டும்' என வாதிடப்பட்டது.

இது குறித்து நீதிபதிகள் கூறும்போது, 'நாளை, நானே ஹோமியோபதி மருத்துவம் போலியானது என கருதலாம். அது ஒருவருடைய கருத்து. இதற்கு எதிராக எப்படி வழக்கு தொடுக்க முடியும். ராம்தேவுக்கு அலோபதி மீது நம்பிக்கை இல்லை. யோகா மற்றும் ஆயுர்வேதத்தால் அனைத்தையும் குணப்படுத்த முடியும் என்று அவர் நம்புகிறார். அவருக்கும் கருத்து சுதந்திரம் உண்டு. அவரது கருத்து தவறு என கருதினாலும், அதை எதிர்த்து பொதுமக்கள் நலன் என்ற பெயரில் வழக்கு தொடுக்க முடியாது. அவரின் கொரோனில் மருந்து வாங்கிய 10 ஆயிரம் பேரில் 9,500 பேர் இறந்தார்கள் என்று நீங்கள் ஊடகங்களில் கூறுவீர்களேயானால் அதற்கெதிராக ராம்தேவ் உங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வாரா? அலோபதி சிலருக்கு வேலை செய்கிறது. சிலருக்கு வேலை செய்வதில்லை. பதஞ்சலி விதிகளை மீறினால், அதுகுறித்து அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். நீங்கள் ஏன் அதைப்பற்றி கவலைப்படுகிறீர்கள். நீதிமன்றத்தின் நேரத்தை வீணாக்குவதற்குப் பதிலாக மருத்துவ சங்கம் கோவிட்டுக்கு ஒரு தீர்வைக் கண்டுபிடிக்க வேண்டும். இந்த மனு மீது பதில் மனு தாக்கல் செய்ய ராம்தேவ் தரப்புக்கு உத்தரவிடப்படுகிறது' என கூறி வழக்கின் மீதான அடுத்த விசாரணையை ஜூலை 13க்கு ஒத்திவைத்தது.






# சீன தடுப்பூசி போட்டும் கொரோனா



சீனாவின் சினோபார்ம் தடுப்பூ சியை வாங்கிய முதல் ஒரு சில நாடுகளில் பஹ்ரைனும் ஒன்று. இந்த தடுப்பூசிகளை தங்கள் நாட்டு மக்களுக்கு செலுத்தியுள்ள போதிலும், அங்கு கொரோனா தாக்கம் மீண்டும் அதிகரித்து வருகிறது. இதனால், அதிர்ச்சியடைந்த பஹ்ரைன், தங்கள் நாட்டில் உள்ள 50 வயதிற்கு மேற்பட்ட மற்றும் நீண்டகால நோய்களைக் கொண்டவர்கள், ஃபைசர் மற்றும் பயோஎன்டெக் எஸ்.இ தடுப்பூசி பூஸ்டர்களை போட்டுக்கொள்ள அறிவுறுத்தியுள்ளது. அந்த நாட்டில் செலுத்தப்பட்ட தடுப்பூசிகளில் 60 சதவீதத்திற்கும் அதிகமானவை சீன தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசிகள்தான்.

பஹ்ரைனில் மட்டுமல்ல, செர்பியாவிலும் சினோபார்ம் தடுப்பூசி சோதனைகள் திருப்திகரமான முடிவுகளைத் தரவில்லை. செர்பியாவில் நடந்த ஒரு சோதனையில், பங்கேற்ற 150 பேரில் 29 சதவீதத்தினர் உடலில் மூன்று மாதங்களுக்குப் பிறகும் வைரஸுக்கு எதிராக ஆன்டிபாடிகள் பூஜ்ஜியம் என்ற அளவில் இருப்பது கண்டறியப்பட்டது. அமெரிக்க மருத்துவ சங்கத்தின் ஜர்னல் ஆய்வு முடிவுகளின்படி, சினோபார்ம் தடுப்பூசியின் செயல்திறன் 78 சதவீத்மாக மட்டுமே இருந்தது கண்டறியப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து சினோபார்ம் தடுப்பூசியை நன்கொடையாக பெற்றதால் சிறிய தீவு நாடான சீஷெல்ஸ், உலகின் அதிக தடுப்பூசி போட்ட நாடாக மாறியது. ஆயினும் அங்கு தற்போது கொரோனா மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளதால், சீஷெல்ஸ் சுகாதார அமைச்சகம் தனது மக்களுக்கு மூன்றாவது பூஸ்டர் ஷாட் தடுப்பூசி போடுவது குறித்து பரிசீலித்து வருவதாகக் கூறியுள்ளது.

பாஜக அலுவலகத்தில்....

